முருகப்பெருமான் துணை

**மகான் யாகோபுசித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.08.2023**, திங்கட்கிழமை

1. நம்பிக்கைத் தந்து கலியினிலே
ஞானிகளை வணங்கி பூசை செய்ய
இம்மையிலே கடைத்தேறுவரென
எல்லையிலா ஞான வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் சோபகிருது யாளி திங்கள்
வரங்களாக சதுர்திகதி சோம வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 04 ம் நாள், 21.08.2023, திங்கட்கிழமை)
வழங்குவேன் யாகோபு சித்தர் யானும்
3. யானும் அறிவுரை ஆசிதன்னை
உலகநலம் பெற உரைப்பேன்
ஞானமழை வரமாகப் பொழியும்
ஞானதேசிகன் உண்மை வழியே
4. உண்மை வழியே உலகை மாற்றும்
உயர் ஞான வழிகள் ஆகும்
நன்மை கருதி உலக மக்கள்
நம்பிக்கை வைத்து சன்மார்க்க
5. சன்மார்க்க நெறிதனை ஏற்று
சரணாகதி கொண்டு வர
சன்மார்க்க சமத்துவ சமதர்ம
சக்திமிகு பூமியாக உலகம் மாறி
6. மாறியே ஞானவான்கள் படை
மகான் அரங்கனால் உருவாகி
ஆறுதல் கொண்ட மாற்றம்
ஆன்மீக அரசியல் களமாக

7. களமாகக் கண்டு இனிதே
கலியினில் மாற்றம் தரும்
வளமான பலமான ஞான
வல்லமை கொண்டத் தலைமையாக

8. ஆகவே உலகம் கண்டு
அமைதி பாதுகாப்புப் பெறும்
வகையான ஞானிகளும் வந்து
வரமீந்து இறங்கி அருள

9. அருளவே அரங்கன் அவதார
அனைத்து நோக்கங்கள் தானும்
வருமுலகில் நிறைவேறி இனி
வையகம் ஞான ஆட்சி கண்டடையும்

10. அடையவே அரங்கன் உருவாக்கும்
ஆற்றல் மிக்க படைகள்
தடைகளை வென்று தனித்துவ
தருமத்தை வளர்த்து சிறந்து

11. சிறந்துமே ஆறுமுகன் ஆசிபட
சிறப்பான நல்லாட்சித் தருவர்
பரந்த பேருலகம் ஞானிகள் வசம் வந்து
பண்பான லோகம் ஆகும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—